DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT NO.I, CHIDAMBARAM.
**Present:Selvi**.M. Mayadevi,B.A., L.L.B.,
**Judicial Magistrate No.I., Chidambaram.**

| | |
|---|---|
| Case No. | DVC.No. 2/2024 |
| Deposition of Witness for Prosecution | PW: 1 (LW: ) |
| Cr.No. and Police Station : | |
| Name: | திருமதி. கலைவாணி |
| Father's /Husband Name: | த.பெ. தண்டபாணி |
| Village: | உத்தமசோழமங்கலம் |
| Age: | |
| **Solemnly Affirmed in accordance with the Provision Act The Oaths Act 1969(Act.44/1969) of the day of 24.01.2026** | |

R1 present.

<u>எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u> :

நான் தற்சமயம் எங்கு வசித்து வருகிறேன் என்றால் உத்தமசோழமங்கலத்தில் வசித்து வருகிறேன். எனக்கும் எதிர்மனுதாரருக்கும் எங்கு, எப்போது திருமணம் நடந்தது என்றால் 04.10.2012 அன்று திருவெண்காடு வட்டத்தில் உள்ள தேவாலயத்தில் திருமணம் நடந்தது. எங்களுடைய திருமணம் பெற்றோர்கள் முடிவு செய்த திருமணம் என்றால் சரிதான். நான் இந்து மதம் என்றாலும் கிருஸ்துவ முறைப்படிதான் திருமணம் நடைப்பெற்றது என்றால் சரிதான். எதிர்மனுதாரரின் தேவலாய Pastor ம் எங்கள் ஊர் தேவலாய Pastor ம் எங்கள் திருமணத்திற்கு வந்திருந்தார்கள் என்றால் சரிதான். எங்கள் திருமணத்திற்கு எதிர்மனுதாரரின் அண்ணன் வந்திருந்தாரா என்றால் இல்லை. எதிர்மனுதாரரின் அம்மா, அக்கா, தங்கைகள் வந்திருந்தார்களா என்றால் வந்திருந்தார்கள். திருமணத்திற்கு பிறகு நான் எனது கணவர் வீட்டில் 2-3 மாதங்கள் இருந்தேன் என்றால் சரிதான். எங்கள் திருமணத்திற்கு எங்கள் வீட்டில் சீர்வரிசை பொருட்கள்(2 இலட்சம்), இரு சக்கர வாகனம்(ரூ.60,000) கொடுத்தார்கள் என்றால் சரிதான். சென்னையில் எத்தனை வருடங்கள் நானும் என் கணவரும் வசித்தோம் என்றால் 3 வருடங்கள். அப்போது நான் சென்னையில் வேலையில் இருந்தேனா என்றால் இல்லை. என் கணவர்தான் வேலையில் இருந்தார். நான் சென்னையில் இருக்கும்போது கர்ப்பமாக இருந்தேனா என்றால் 2 மாதம் கர்ப்பமாக இருந்தேன். நான் கர்ப்பமாக இருந்த காலத்தில்

மருத்துவரிடம் சென்றேனா என்றால் கர்ப்பம் கலைந்த பிறகு சென்றேன். மேற்படி விஷயத்தை நான் எதிர்மனுதாரரிடமும், அவரது குடும்பத்தாரிடமும் சொன்னேனா என்றால் சொன்னேன். நான் சென்னையில் வசித்த போது அக்கம், பக்கம் இருந்த வீடுகளில் இருந்து சுமார் 3 இலட்சம் கடன் வாங்கினேனா என்றால் 1 இலட்சம் கடன் வாங்கி இருந்தேன். அதையும் திருப்பி கொடுத்துவிட்டேன். மேற்படி கடனை என் கணவர்தான் அடைத்தார் என்றால் சரியல்ல. நான் தான் அடைத்தேன். நான் சொல்வது போல் கடனை நான் அடைக்கவில்லை என்றாலும் என் கணவர்தான் அடைத்தார் என்றாலும், அதனால் அவர் தங்கைக்கு திருமணம் செய்து வைக்க முடியவில்லை என்று என்னிடம் சொன்னார் என்றாலும் அதனால் நான் சென்னையில் இருந்து என் வீட்டிற்கு சென்று விட்டேன் என்றாலும் சரியல்ல. 3 மற்றும் 4 ஆம் எதிர்மனுதாரர்கள் திருமணம் ஆகி அவர்கள் வீட்டில் வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். நான் ஊருக்கு வந்தபோது அவர்கள் வந்து எங்கள் வீட்டிற்கு வந்து என்னை பார்க்க மாட்டார்கள் என்றால் எப்போதாவது வந்து பார்ப்பார்கள். 3 மற்றும் 4 ஆம் எதிர்மனுதாரர்கள் என்னை எதுவும் தொந்தரவு செய்ய வில்லை என்றால் சீர்வரிசை வேண்டி தொலைபேசியில் சொல்லியுள்ளார்கள். அவ்வாறு எப்போது சொன்னார்கள் என்றால் வீட்டில் பிரச்சனை நடக்கும்போது எல்லாம் சொல்லுவார்கள். 5 ம் எதிர்மனுதாரர் மணிமேகலை என்பவரின் திருமணத்தின்போது நான் இருந்தேன் என்றால் நான் தான் அவருக்கு திருமணம் செய்து வைத்தேன். 5 ம் எதிர்மனுதாரர் மணிமேகலை என்பவரின் திருமணத்திற்கு முன்பு வரை அவரும் நாங்களும் ஒன்றாக வசித்தோம் என்றால் சரிதான். என் கணவரின் அப்பா இறந்துவிட்டதால் குடும்ப பொருப்பு முழுவதும் எதிர்மனுதாரர் மீது இருந்தது என்றால் சரிதான். 5 ம் எதிர்மனுதாரருக்கு திருமணம் 3 ம் மற்றும் 4 ஆம் எதிர்மனுதாரர்கள் செய்து வைத்தார்கள் என்றால் சரியல்ல, என் கணவர்தான் முழுசெலவையும் செய்து திருமணம் செய்து வைத்தார். மேற்படி சம்பவங்கள் நான் சென்னையில் இருந்து வந்த பிறகு நடந்தது என்றால் சரிதான். நான் என் கணவரிடம் எனக்கு அவர் எந்த செலவுகளும் செய்யவில்லை என்று சண்டையிட்டேன் என்றால் சரியல்ல. என் குடும்பத்தை பார்ப்பதில்லை என்றும் என்னை மருத்துவமணைக்கு அழைத்து செல்லவில்லை என்றும் என் கணவரிடம் கேட்டேன் என்றால் சரிதான். நான் தற்கொலை செய்வதற்காக அதிக துாக்கு மாத்திரைகளை எடுத்துக்கொண்டபோது மருத்துவமணைக்கு சென்றேனா என்றால் சென்றேன். அப்போது என் கணவர் உடன் இருந்து மருத்துவ செலவை பார்த்து கொண்டார் என்றால் சரிதான்.

Taken down by me in open Court in the presence of the accused read over of the witness and Admitted by him/her to by correct.

(**Selvi**.M. Mayadevi,)
J.M.No.I, Chidambaram